செய்தி வெளியீடு   நாள் : 12.03.2024

மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய ஜி.எஸ்.டி. சாலையின் குறுக்கே மற்றும் கிளாம்பாக்கம் இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் ரூ.79.00 கோடி மதிப்பீட்டில் புதிய நடைமேம்பாலம் அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்து மற்றும் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் புதிய பூங்காவை திறந்து வைத்தார்.

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இன்று (12.3.2024) மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய ஜி.எஸ்.டி. சாலையின் குறுக்கே மற்றும் கிளாம்பாக்கம் இரயில் நிலையத்தையும் இணைக்கும் வகையில் ரூ.79.00 கோடி மதிப்பீட்டில் 220 மீட்டர் நீளத்தில் புதிய நடைமேம்பாலம் அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்து மற்றும் இம்முனையத்தில் 6 ஏக்கர் பரப்பளவில் ரூ.12.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்றுகளுடன் கூடிய புதிய பூங்காவை திறந்து வைத்தார்.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் இருந்து புதிதாக அமைக்கப்பட உள்ள கிளாம்பாக்கம் ரயில் நிலையத்திற்கு பயணிகள் எளிதில் சென்று சேரும் வகையிலும், பேருந்து நிலையத்திற்கு முன்பாக பாதசாரிகள் ஜிஎஸ்டி சாலையினை பாதுகாப்பாக கடக்கும் வகையிலும் ஒரு நடைமேடை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் திட்ட மதிப்பீடு ரூபாய் 79 கோடி ஆகும். இந்நடைபாதை சுமார் 220 மீட்டர் நீளத்தில் ஜிஎஸ்டி சாலையின் குறுக்கே அமைக்கப்பட உள்ளது. இதில் 8 மீட்டர் அகலத்தில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் நடந்து செல்வதற்கான அமைக்கப்படும். மேலும் எஸ்கலேட்டர்கள், மின் தூக்கிகள், படிக்கட்டுகள் ஆகியவையும் அமைக்கப்பட உள்ளது. இப்பணிகளை அடுத்த 12 மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்றவுடன் புதிதாக அமைக்கப்பட உள்ள கிளாம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து நூற்றாண்டு பேருந்து நிலையத்திற்கு பயணிகள் எளிதாக வந்து செல்ல இயலும்.

Verified @ RealEstate ™

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் பொழுதுபோக்கிற்காகவும், பசுமை பரப்பினை ஏற்படுத்தும் பொருட்டும் ரூபாய் 12.80 கோடி செலவில் சுமார் 6 ஏக்கர் பரப்பளவில் ஒரு நீரூற்று பூங்கா அமைக்க முடிவு செய்யப்பட்டு கடந்த ஆண்டு ஜூன் மாதம் பணிகள் துவக்கப்பட்டு கடந்த நவம்பர் 2023-இல் பணிகள் முடிக்கப்பட்டன. இப்பூங்காவில் பொதுமக்களுக்கான புத்துணர்ச்சியூட்டும் நடைபாதைகள், அலங்கார பூச்செடிகள், அமரும் பலகைகள், குழந்தைகளுக்கான நீர் ஊற்று, சதுரங்க சிற்பங்கள், பாறை பூங்கா, குளம், கால்வாய்கள், இரவு நேரங்களில் வண்ணமயமான விளக்குகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமம் (CUMTA) சிறப்பு அலுவலர் திரு.ஐ.ஜெயக்குமார், ஐ.ஆர்.டி.எஸ்., அவர்கள், தலைமை நிர்வாக அலுவலர் (ம) மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஜெ.பார்த்தீபன், கண்காணிப்பு பொறியாளர் (பொ) திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Verified RealEstate™